# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

**ஆணை நாள்** 07.04.2026

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப. (ஓய்வு)**

மாநிலத் தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 7968/B/2023**

**திரு.P.உதயகுமார்** — **மேல்முறையீட்டாளர்**

**/எதிர்/**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்**
**வட்டாட்சியர் அலுவலகம்**
**பொன்னேரி வட்டம்**
**திருவள்ளூர் மாவட்டம்.** — **பொது அதிகார அமைப்பு**

**ஆணை**

இவ்வாணையத்தால் 15.12.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.K.T.பாரதி, பொது தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பொன்னேரி அவர்கள் 10.03.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி, இவ்வாணையத்தின் உத்தரவிற்கிணங்க, 09.03.2023 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டது எனத் தெரிவித்து, ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், 17.12.2026 அன்று மதியம் 2.30 மணியளவில் மனுதாரர் பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகத்தில், காணியம்பாக்கம் கிராம புல எண்.40/1 தொடர்பாக UDR பதிவேடு, 'அ' பதிவேடு, பசலி 1430, 1431, 1434 ஆகியவற்றின் அடங்கல் அனைத்தையும் பார்வையிட்டு நகல்களை பெற்றுக்கொண்டார் எனவும், மனுதாரரும் திருப்திகரமாக நகல்களை பெற்றுக் கொண்டதாக எழுத்துமுலமாகத் தெரிவித்தார் எனத் தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், விசாரணைக்கு ஆஜராகாதது குறித்த விளக்க அறிக்கையினையும் மற்றும் குறித்த காலத்திற்குள் தகவல் தராத அன்றைய பொது தகவல் அலுவலர் அளித்த விளக்க அளிக்கையையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், பொது தகவல் அலுவலரால் போதிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு

செய்கிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் அளித்த விளக்க அறிக்கையினை இவ்வாணையம் ஏற்று, பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தின் உத்தரவின் அடிப்படையில், மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கி, ஆணையத்தின் ஆணையை வேற்றியுள்ளதால், மேற்கூறிய வழக்கு முடிவுற்றதாக கருதி, இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகின்றது.

ஒம்/- பி.தாமரைக் கண்ணன்
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 7968/B/2023</u>
<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு:</u>
பொது தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
பொன்னேரி வட்டம்
திருவள்ளூர் மாவட்டம்.

<u>மனுதாரர்:</u>
திரு.P.உதயகுமார்
புதிய எண்.53, பழைய எண்.24,
நடுத்தெரு, மயிலாப்பூர்
சென்னை 600 004.

Copy to: File
VM/PA / 13.04.2026